**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>**

**முன்னிலை: திருமதி, சாதத்துனிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04 ம் நாள் திங்கள் கிழமை

**<u>இடைநிலை மனு எண். 2/2024</u>**

**<u>IN</u>**

**<u>அசல் வழக்கு எண். 38/2024</u>**

1.ஷேக் முகமது
2. பஷீர் முகமது
3. தாஹிரா பானு
4.சர்புனிஷா ..... வாதிகள்

//எதிர்//

1. வெள்ளையம்மாள்
2. நல்லம்மாள்
3. சார்பதிவாளர்,
அன்னவாசல்
4.மாவட்ட பதிவாளர்
அன்னவாசல்
5.மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை.

...... பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 04.08.2025 ம் தேதி வந்தபொழுது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.J.அமீர் உசேன், அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S.பத்ரிநாத், அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராகியும், இரு தரப்பிலும் கேட்கப்பட்டும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்தபின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது இறுதி தீர்வாகும் வரை மனுச் சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்கிரைய வில்லங்கங்கள் 2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஏற்படுத்தவோ அதனை 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிவுக்கு உட்படுத்தவோ கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு எதிரவரில்லா தற்காலிக இடைக்ால தடையாணை பரிகாரம் வழங்கியும், அவ்வண்ணமே இவ்வழக்கு இறுதி தீர்வாகும் வரை மனுச்

சொத்தை 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எந்த வகையிலும் எந்தவித பெந்தக பாராதீன விற்கிரையங்களுக்கு உட்படுத்தக் கூடாது எனவும், அவ்வாறு 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி விற்கிரையங்களுக்கு உட்படுத்தினால் அதனை 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிவுக்கு உட்படுத்தக் கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

தான் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1-ம் வாதி ஆவேன் என்றும், தனக்கு வழக்கு விபரம் தெரியும் என்றும், தான் இம்மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும்/ வாதிகளுக்காகவும் தாக்கல் செய்கிறேன் என்றும், மனு சொத்து தங்களுக்கு மட்டுமே என உரிமை விளம்பல் செய்ய வேண்டி, அதனை அனுசரித்து மனு சொத்தில் தங்களின் அமைதியான அனுபவத்தை 1,2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளோ, அவரது ஏஜெண்ட்களோ எக்காலத்தில் தடை, தகராறு ஈடுபடக்கூடாது என நிரந்தர தடையாணை பரிகாரம், வழங்கியும், மனுச்சொத்தை பொறுத்து 1-ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதி/ 2-ம்எதிர்மனுதாரர்/ பிரதிவாதி பெயரில் 3-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி அலுவலகத்தில் கடந்த 23.04.2015ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 689/2015 செல்லாது இல்லாநிலையுடையது என அறிவித்தும், வழக்கு செலவுத்தொகை தங்களுக்கு கிடைக்கவும், மற்றும் இன்னும் பிற பரிகாரங்களும் வேண்டியும் அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், மனுச்சொத்து புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, புதுார் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், மனுச்சொத்து ஆதியில் இலுப்பூர் தாலுகா, புதுாரைச் சேர்ந்த ராமு மகள் சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மேற்படி சிட்டுப்பிள்ளை பெயரில் செட்டில்மெண்ட் காலத்தில் ரூபாய் ஆவணங்களில் பதிவுகள் ஏற்பட்டு மேற்படி சிட்டுப்பிள்ளையால் அனுபவித்து வரப்பட்ட 0.14.50 ஏர்ஸ் விஸ்தீர்ணம் கொண்ட புஞ்சை நிலம் ஆகும் என்றும், மேற்படி சொத்தை தங்களது தந்தை கலிபுல்லா என்பவர் கடந்த 24.08.1992ம் தேதியில் அதன் முன்பாத்தியஸ்தரான சிட்டுப்பிள்ளை, பெரியண்ணகோனார் தம்பதியர்களின் சட்டப்படியான ஒரு வாரிசுயான சிலம்பகோனாரிடமிருந்து தகுந்த மறு பயன் கொடுத்து மனு சொத்தில் விஸ்தீர்ணம் 0.14.50 ஏர்ஸ் புஞ்சை நிலத்தை கிரையம் பெற்றார் என்றும், மேற்படி கிரையச் சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் மேற்படி சிட்டுப்பிள்ளை பெயரிலேயே இருந்து வந்த போதிலும்,

கிரைய காலம் முதல் கிரைய சொத்தை சுவாதீனம் அடைந்து, தென்னங்கன்றுகள் வைத்து பராமரித்து யாருடைய குறுக்கீடுகள் இன்றி தங்களது தந்தையான கலிபுல்லா அனுபவம் செய்து வந்தார் என்றும், மேற்படி தங்களின் தகப்பனார் கலிபுல்லா அவர்கள் கடந்த 05.10.2007 ம் தேதியில் இறந்து விட்டார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னர் கலிபுல்லாவிற்கு பாத்தியமான மனுச்சொத்தை தாங்கள் வாரிசுகிரமாபடி அடைந்து யாருடைய குறுக்கிடுமின்றி அனுபவம் செய்து வருகிறோம் என்றும், மேற்படி கலிபுல்லா கடந்த 05.10.2007 இறந்து விட்டதற்கு இலுப்பூர் தலைமையிடத்து வட்டாட்சியர் இறப்பு எண் ந.க.10318/2007/அ 6–ன் படி 05.10.2007 ம் தேதியில் வழங்கப்பட்டது என்றும், மேற்படி கலிபுல்லா இறப்பிற்கு பின்னர் அவருக்கான வாரிசு சான்றிதழ் 08.02.2008 ம் தேதியில் இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இறந்துபோன கலிபுல்லாவுக்கு தாங்கள் வாரிசு என்றும், என்று கண்டு உரிய ஸ்தல விசாரணைக்கு பின்னர் வாரிசு சான்றிதல் வழங்கியுள்ளன என்றும், இந்த நிலையில் தாங்கள் இலுப்பூர், முக்காணம்மலை கிராமத்தில் வசித்து வந்த காரணத்தாலும், தாங்கள் அடிக்கடி தங்களது தொழில் நிமித்தமாக வெளியூர்களுக்கு சென்றுவிடுவதாலும் தங்களால் மனுச்சொத்தை கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு போனது என்றும், மனுச்சொத்தில் முன்பாஸ்த்தியர் சிட்டுப்பிள்ளை என்பவர் கடந்த 12.03.1973 ம் தேதியில் இறந்து விட்டபோதிலும், மனுச்சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் சிட்டுப்பிள்ளை பெயரிலேயே இருந்து வந்து என்றும், இந்த சந்தர்ப்பங்களை தங்களுக்கு சாதமாக பயன்படுத்திக்கொண்டு மனுச்சொத்திற்கு எந்த காலத்திலும் எந்த வகையிலும் சம்பந்தமோ, உரிமையோ, அக்கரையோ, அனுபவமோ எதுவும் இல்லாத 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிள் மனுச்சொத்தை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தோடு 1–ம் பிரதிவாதி தனது பெயரான வெள்ளையம்மாள் என்பதை மறைத்து கிராம நிர்வாக அலுவலரை கையடக்கம் செய்துக்கொண்டு மனுச்சொத்தை வெள்ளையம்மாள் என்ற சிட்டுப்பிள்ளை என்று பொய்யாக சொல்லி போலியான சான்றை பெற்று வைத்துக்கொண்டு மனுச்சொத்தை பொறுத்து 2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் பெயரில் போர்ஜரியான இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை உற்பத்தி செய்து அதனை 3–எதிர்மனுதாரர்/பிரதிவாதி அலுவலகத்தில் கடந்த 28.12.2022–ம் தேதியில் மனு செய்தேன் என்றும், தனது மேற்படி மனுவும் 3–ம் பிரதிவாதி அலுவலகத்தில் விசாரணைக்காக நிலுவையில் இருந்த சமயத்தில் மாணபுமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு காரணமாக தனது மனு 3–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது என்றும், இந்த நிலை மனுச்சொத்து எங்கு உள்ளது என தெரியாமல் இருந்து வந்த 1,2 எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் எப்படியோ மனுச்சொத்து

இருப்பிடத்தை அறிந்துக்கொண்டு கடந்த 27.12.2023ம் தேதியில் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் அவர்வகை ஆட்கள் மனுச்சொத்திற்குள் அத்துமீறி உள்ளே புகுந்து மனுச்சொத்தில் இருந்த உயிர்வேலி மற்றும் கருவேல மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும், விபரம் அறிந்து 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் அடாவடிச்செயலை தடுக்கச்சென்ற என்னிடம் மனுச்சொத்தில் உள்ள உரிமையை மறுத்து மிரட்டினார்கள் என்றும், எனவே மேற்படி சம்பவம் தொடர்பாகவும் 1-ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆள் மாறட்டம் செய்து 2-ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் மனுச்சொத்தை பொறுத்து விலங்குப்பதிவு 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளக்கேட்டு தான் கடந்த 02.01.2024ம் தேதியில் புதுக்கோட்டை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு கொடுத்தேன் என்றும், மேற்படி புகாரும் விசாரணையில் இருந்தவந்த சமயத்தில் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீண்டும் மனுச்சொத்திற்கு 07.01.2024ம் தேதியில் அத்துமீறி பிரவேசித்து உயிர் வேலிகளையும், கருவேல மரங்களையும் வெட்டி அப்புறப்படுத்த முயற்சித்தனர் என்றும், அதுத்தொடர்பாக தான் அன்னவாசல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், அந்த புகாருக்கு அன்னவாசல் காவல்நிலையத்தார் புகார் ஏற்பு ரசீது வழங்கி விசாரணை மேற்கொண்டு உரிய சிவில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளும்படி மனுவை முடித்துவிட்டனர் என்றும், இதற்கிடையில் தான் புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவரிடம் கொடுத்த மனுவை புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையினர் விசாரணை செய்தனர் என்றும், அந்த விசாரணையில் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆள்மாறாட்டம் செய்து ஆவணங்கள் ஏற்படுத்தியிருந்த விபரம் தெரிந்த பின்னரும் காவல்துறையினர் ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டு தனது புகாரை மனுவை தட்டிக்கழிக்கும் விதமாக தன்னை உரிய சிவில் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக்கொள்ளும்படி மனுவை முடித்து வைத்துவிட்டனர் என்றும், அந்த காவல்துறை அறிக்கையை எதிர்த்து தான் உரிய சட்ட மேல்நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றும், இந்த நிலையில் 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி மாண்பமிகு இலுப்பூர் உரிமையியல் நீதிமன்றத்தில் பொய்யான காரணங்களைச் சொல்லி வழக்குச்சொத்தை பொறுத்து தான் மற்றும் சிலம்பக்கோனார், அவரது மகனான ராசு ஆகியோர் மீது அசல் வழக்கு எண்.11/2024 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கிற்கும் தான் உண்மை நடப்புகளைக்கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சியாடி வருகிறேன் என்றும், மேலும் மனுச் சொத்திற்கு தற்போது 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் பட்டா பதிவு

ஏற்பட்டிருந்தாலும், மனச் சொத்து தங்களின் சுவாதீன அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும், மனுச் சொத்தில் தற்போது கருவேல மரங்கள் உள்ளது என்றும், மனுச் சொத்திற்கும் 1, 2 எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளுக்கும் எந்த வித உரிமையும், அக்கரையும், அனுபவமும் எதுவும் இல்லாத நிலையில் அவர்கள் ஏற்படுத்திய ஆவணங்கள் எதுவும் செல்லாது அந்த ஆவணங்கள் மனுச் சொத்தில் தங்களுக்கு உள்ள உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், மனுச் சொத்து இறந்துபோன கலிபுல்லாவின் கிரைய சொத்தாகும் என்றும், மேற்படி கலிபுல்லாவின் இறப்பிற்கு பின்னர் மனுச் சொத்து தங்களையே வாரிசு முறையில் சாரும் என்றும், மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுச்சொத்து தங்களுக்கு உள்ள உரிமையை மறுத்து வருவதாம், மனுச் சொத்தைப் பொறுத்து 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தன் மேல் இலுப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்துவருவதாலும், மனுச்சொத்தை பொறுத்து தங்களின் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள வேண்டி தங்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் 1, 2 பிரதிவாதிகள் /எதிர்மனுதாரர்கள் மனுச் சொத்தில் ஆக்கிரமனங்கள் எதுவும் தனக்கு பணத்தால் ஈடு செய்ய இயலாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், 2ம் எதிர்மனுதாரர்களின்சட்டவிரோத செயல்களை சமூகம் நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே தடுத்து நிறுத்த இயலும் என்றும், எனவே அதனை பொறுத்து தான் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக மனு அட்டவணைச் சொத்துக்களை வழக்கு முடியும் வரை மூன்றாம் நபர்களுக்கு விற்கிரைய வில்லங்கங்கள் அவர்கள் ஏற்படுத்தவோ அதனை 3, 4 ம் எதிர்மனுதாரர்கள் பதிவுக்கு ்உடபடுத்தவோ கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு எதிரவரில்லா தற்காலிக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்கவும், அவ்வண்ணமே இவ்வழக்கு இறுதி தீர்வாகம் வரை மனுச்சொத்தை 1, 2ம் எதிர்மனுதாரர்கள் எந்த வகையிலும், எந்தவித பெந்தக பாராதீன விற்கிரையங்களுக்கு உட்படுத்தக் கூடாது எனவும், அவ்வாறு 1,2 ம் எதிர்மனுதாரர்கள் விற்கிரையங்களுக்கு உட்படுத்தினால் அதனை 3,4 ம் எதிர்மனுதாரர்கள் பதிவுக்கு உட்படுத்தக் கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்கிறேன் என்றும், இம்மனு உத்தரவாகாதா பட்சத்தில் தனக்கு பணத்தால் ஈடு செய்ய இயலாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே மனுச் சொத்துக்களை வழக்கு முடியும் வரை மூன்றாம் நபர்களுக்கு விற்கிரைய வில்லங்கங்கள் 2ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்தவோ அதனை 3, 4ம் எதிர்மனுதாரர்கள் பதிவுக்கு உட்படுத்தவோ கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு எதிரவரில்லா தற்காலிக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்கியும், அவ்வண்ணமே

இவ்வழக்கு இறுதி தீர்வாகும் வரை மனுச் சொத்தை 2ம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் எந்தவித பெந்தக பாராதீன விற்கிரையங்களுக்கும் உட்படுத்தக் கூடாது எனவும், அவ்வாறு 2ம் எதிர்மனுதாரர் விற்கிரையங்களுக்கு உட்படுத்தினால் அதைனை 3, 4ம் எதிர்மனுதாரர்கள் பதிவுக்கு உட்படுத்தக் கூடாது என அவர்களுக்கு எதிராக ஒரு இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1,2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரை சுருக்கம்**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுச் சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், 2ம் எதிர்மனுதாரர் அவரது மகள் ஆவார் என்றும், மேற்சொன்ன சிட்டுப்பிள்ளைக்கு மனுச் சொத்து சுதந்திரத்திற்கு முன்பு பாத்தியப்பட்டு அவரது பெயரில் செட்டில்மெனட் பதிவேடும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன சிட்டுப்பிள்ளை ராமசாமி, சின்னம்மாள் ஆகியோரின் மகள் என்றும், அவர் கடந்த 2015ம் ஆண்டு அவரது மகளான 2ம் எதிர்மனுதாரருக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், அது முதல் மனு சொத்தை 2ம் எதிர்மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார் என்றும், 1ம் மனுதாரர் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாதவர் என்றும், அவர் 3ம் மனுதாரருக்கு மனுச் சொத்தை கிரையம் ஏற்படுத்தியயுள்ளார் என்றும், அவ்வாறு கிரையம் ஏற்படுத்த 1ம் மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனவே மனுதாரர்களின் இம்மனுவை அதிகப்பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ம.சா.ஆ1 முதல் ம.சா.ஆ 11 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

1) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் இந்த மனுவும் 2ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதி மனு அட்டவணைச்

சொத்துக்களை வழக்கு முடியும் வரை 3ம் நபர்களுக்கு விற்கிரைய வில்லங்கங்கள் ஏற்படுத்தக் கூடாது எனவும், அதனை 3, 4 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பதிவுக்கு உட்படுத்தவோக் கூடாது எனவும், அவர்களுக்கு எதிராக தற்காலிக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்க வேண்டியும், அதை போல் இவ்வழக்கில் இறுதி தீர்ப்பாகும் வரை மனுச் சொத்தை 1, 2 எதிர்மனுதாரர்கள் எந்த வகையிலும் விற்கிரையங்களுக்கும் உட்படுத்தக் கூடாது என அவர்களுக்கெதிராக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்க வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேலும், மனுதாரர் தரப்பில் மனு சொத்தானது ஆதியில் ராமு மகள் சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்து என்றும், மேற்படி சிட்டுப்பிள்ளை, பெரிய கோனார் தம்பதியர்களின் ஒரே வாரிசான சிலம்பக் கோனார் எனப்வரிடமிருந்து தகுந்த மறு பயனுக்கு வாதியின் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அது முதல் தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதாகவும், கூறப்பட்டு அதற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் ம.சா ஆ 1 முதல் ம.சா.ஆ 11 வரையிலான ஆவணங்கள குறியீடு செய்யப்பட்டுள்ளன.

3) எதிர்மனுதாரர் தரப்பில், மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் கடந்த 2015 ம் ஆண்டு அவரது மகளான வாதிக்கு 2015ல் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், அதனடிப்படையில் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், கூறப்பட்டுள்ளது.

4) மேற்படி மனுதாரர் தரப்பில் மனுச் சொத்தை சிட்டுப்பிள்ளை, பெரியன்ன கோனார் ஆகியோரின் வாரிசான சிலம்பக்கோனாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ 1 ஆவணத்தின் மூலம் தெரியவந்தாலும், மனுச் சொத்து ஆதியில் ராமு மகள் சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டு அதற்கு ஆதரவாக மனுச் சொத்தைப் பொறுத்து சிட்டுப்பிள்ளை என்பவர் பெயரில் ஏற்பட்ட ம.சா.ஆ 5 ஆன செட்டில்மென்ட் Register ன் சான்றிட்ட நகல் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ம.சா.ஆ 5 ஆவணத்தில் மனுச் சொத்தின் உரிமையாளர் என்ற இடத்தில் ராமு பிள்ளை மகன் சிட்டுப்பிள்ளை என குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்கும் பொழுதும் மேலும் மேற்படி

சிட்டுப்பிள்ளை என்பவர் ராமு என்பவரின் மகள் என்பதைக் குறித்து காட்டும்வாரிசு சான்று எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யாதததை பார்க்கும் பொழுது, மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மசா.ஆ 4 ஆன மேற்படி சிட்டுப்பிள்ளை என்பவரின் வாரிசு சான்றிதழில் அவரது கணவர் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேற்படி மனுதாரர் தரப்பில் கூறப்படுவது போல் மேற்சொன்ன ராமு என்பவரின் மகளான சிட்டுப்பிள்ளை என்பவரின் வாரிசிடம் இருந்து, வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றதன் மூலம் அவரது வாரிசுகளான வாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதைக் குறித்து தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கும் விதமாகவும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவர் ஒரே நபர் என்பதைப் பொறுத்து நிரூபிக்கும் விதமாகவும் , இருதரப்பிலும் வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின மூலம் மட்டுமே தெளிவாக தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்குவது உசிதமாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04-ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.08.04 15:39:33 +0530

ஒம்/-எம்.சாதத்துனிஷா

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | ஆவண எண்.329/1992 ன் கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | -- | கலிபுல்லாவின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | -- | கலிபுல்லாவின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | --- | சிட்டுப்பிள்ளையின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | செட்டில்மென்ட் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | | ரீ செட்டில்மென்ட் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | -- | மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட மனு நகல் |
| ம.சா.ஆ.8 | -- | அன்னவாசல் காவல் நிலையத்தார் கொடுத்த மனு ரசீது |
| ம.சா.ஆ.9 | -- | 689/2015ம் ஆண்டின் செட்டில்மென்ட் ஆவணம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ. 10 | -- | 10(1) சிட்டா- சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 | -- | 1ம் வாதியின் பெயரில் இருந்த வரி ரசீதுகளின் எண்ணிக்கை -2 |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை</u>**

M
SATHATHUNISHA

Digitally signed by M
SATHATHUNISHA
Date: 2025.08.04
15:39:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கீரனூர்**

**முன்னிலை - திரு.எம். ஜியாவுர் ரகுமான், பி.ஏ.,பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, கீரனூர்.

2019-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8-ம் நாள் வியாழக் கிழமை

**2050 திருவள்ளுவராண்டு விகாரி வருடம் ஆடித் திங்கள் 23-ம் நாள்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.524/18**

**அசல் வழக்கு எண். 56/18**

R.சூசை அமலதாஸ், வயது சுமார் 64
த/பெ.ராயப்பன்
எண்.95 அண்ணாநகர், மாத்தூர்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. A.நிர்மலா மேரி, வயது சுமார் 60
   க/பெ.ஆரோக்கியமேரி,
   அபிராமிநகர், பர்மா காலணி,
   குண்டூர் அஞ்சல், திருச்சி - 7
2. பிரியா, வயது சுமார் 30
   த/பெ.அய்யாவு
   எண்.69 - A, அண்ணாநகர் 5ம் வீதி,
   மாத்தூர், குளத்தூர் தாலுகா,
3. உதவி மின் பொறியாளர்
   தமிழ்நாடு மின்சார வாரியம்
   மாத்தூர்
4. உதவி நிர்வாக பொறியாளர்,
   தமிழ்க மின்சார வாரியம்
   செயல்படுத்துதல், பராமரித்தலும்,
   மாத்தூர்.
5. நிர்வாக பொறியாளர்,

தமிழ்நாடு மின்சார வாரியம்,
(செயல்படுத்துதல், பராமரித்தலும்)
கீரனூர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர்/வாதி 3 முதல் 5 உத்தேச எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் மனுதாக்கல் செய்துள்ளார்.

**மனு முன்னிடப்பட்ட நாள் -** 19.07.2018

**இந்த மனுவிற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.20/- செலுத்தப்பட்டுள்ளது.**

இம்மனுவானது இறுதியாக 22.07.2019 அன்று என்முன்பாக விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.ராமையா அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.C.C.செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாதரப்பினராக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்காவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்பாணைக் கட்டளை**

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது என்றும்,
2. 2ம் உத்தேச எதிர்மனுதாரரை 2ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்க்க உத்தரவிட்டும்,
3. 3 முதல் 5 உத்தேச எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்பதால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரியுள்ள பரிகாரத்தை தள்ளுபடி செய்ய உத்தரவிட்டும்,
4. செலவுத்தொகை இல்லை என்று கட்டளையிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2019-ம் ஆண்டுஆகஸ்ட் திங்கள் 8-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரை வைத்து வழங்கப்படுகிறது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**கீரனூர்.**